**மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**

**தாராபுரம்**

**முன்னிலை : திரு.C.M.சரவணன், பி.ஏ.எல்.எல்.எம்.,**

மூன்றாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12- ம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.3/2023**

**இன்**

**அ.வ.எண்.295/2017**

மெகந்தரா ...மனுதாரர்/2-ம் பிரதிவாதி

// எதிர் //

M.சிதம்பரசாமி

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் 03.12.2024-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/2-ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு..M.ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு..K.பன்னீர்செல்வம், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/2-ம் பிரதிவாதி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் 20.09.2018 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9, விதி 7 மற்றும் பிரிவு 151-ன் படி மனுதாரர்/ 2-ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/2-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/ வாதி, பிராமிசரி நோட்டின் பேரில் வழக்கு

தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை லேட்.சந்திரன், சிதம்பரசாமி, கே.சி.நாச்சிமுத்து ஆகியோர்களின் மிரட்டல் மற்றும் தூண்டுதல் காரணமாக, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை சந்திரன் 24.07.2017 அன்று தற்கொலை செய்து கொண்டதாகவும், வாதியின் சம்பந்தி கே.ஆர்.பி பழனிச்சாமியும், லேட்.சந்திரனும், பொள்ளாச்சியில் விஷ்வமுகி பைனான்ஸ் கூட்டு பங்குதாரர்களாக இருந்து வந்துள்ளார்கள். பங்குதாரர்கள் முறையில் வாங்கி கொடுக்கும் கடனிற்காக பங்குதாரர்கள் பூர்த்தி செய்யாமல் எழுதிக்கொடுக்கும் பிராமிசரி நோட்டுகளை வைத்து, இவ்வழக்கை வாதி தாக்கல் செய்து, சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்து வருகிறார். 2017 அன்று வழக்கு தாக்கல் செய்த போது மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் சகோதரர், 3-ம் பிரதிவாதி மைனர். மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை காலஞ்சென்றதற்கு பின்னிட்டு, படிப்பிற்காக ஈரோட்டில் வசித்து வந்தபோது, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் வழக்கு குறித்து தெரிவித்தபோது, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தாயார் வழக்கை நடத்தி வந்தபோது, அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், வழக்கறிஞரை சந்தித்து ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவில்லை. எனவே, மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு எதிராக முதலேற்பு வழக்கில், 20.09.2018 அன்று, பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவை அனுமதிக்காத பட்சத்தில், மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும். மனு அனுமதிக்கப்படவேண்டும்.

**3. எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரரும், 1, 3 பிரதிவாதிகளும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அசல் வழக்கில் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் கொடுத்தபோதும் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால், 20.09.2018 அன்று ஒருதலைபட்ச உத்தரவு

பிறப்பிக்கப்பட்டது. ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு 5 வருடங்கள் காலதாமதமாக பொய்யான காரணங்களுடன் மனுதாரர் தனியாகவும், அவரது தாயாரும், சகோதரரும் இ.ம.எண்.3/2023 என்ற எண்ணில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் சரியல்ல. எந்தவிதமான ஆவணங்களையும், மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. மனுதாரரின் தந்தை, இந்த எதிர்மனுதாரரிடன் கடன் பெற்றதற்காக பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தது, மனுதாரருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரியும் என்பதால், எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தாமல் வழக்கை காலதாமதப்படுத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. M.துரைசாமி எதிர் வசந்தா மற்றும் அகிலா என்ற வழக்கில் (2023) (1) CTC 444) 2 1/2 வருடங்கள் கழித்து தாக்கல் ஆணை 9 விதி 7 மனுவையே சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கக்கூடாது என தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இந்த மனு 5 வருடங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை எதிர்மனுதாரர்/ வாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. இம்மனுவில், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

5. தீர்வு:-

**6**. மனுதாரர்/2-ம் பிரதிவாதி தரப்பில், மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை லேட்.சந்திரன், சிதம்பரசாமி, கே.சி.நாச்சிமுத்து ஆகியோர்களின் மிரட்டல் மற்றும் தூண்டுதல் காரணமாக, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை சந்திரன் 24.07.2017 அன்று தற்கொலை செய்து கொண்டதாகவும், வாதியின் சம்பந்தி கே.ஆர்.பி பழனிச்சாமியும், லேட்.சந்திரனும், பொள்ளாச்சியில் விஷ்வமுகி பைனான்ஸ் கூட்டு பங்குதாரர்களாக இருந்து வந்துள்ளார்கள். பங்குதாரர்கள் முறையில் வாங்கி கொடுக்கும் கடனிற்காக பங்குதாரர்கள் பூர்த்தி செய்யாமல் எழுதிக்கொடுக்கும் பிராமிசரி நோட்டுகளை வைத்து, இவ்வழக்கை வாதி தாக்கல் செய்து, சொத்துக்களை அபகரிக்க

முயன்று வருகிறார் என்றும், 2017 அன்று வழக்கு தாக்கல் செய்த போது மனுதாரர்/2ம் பிரதிவாதியின் சகோதரர், 3-ம் பிரதிவாதி மைனர் என்றும், மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தந்தை காலஞ்சென்றதற்கு பின்னிட்டு, படிப்பிற்காக ஈரோட்டில் வசித்து வந்தபோது, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் வழக்கு குறித்து தெரிவித்தபோது, மனுதாரர்/2-ம் பிரதிவாதியின் தாயார் வழக்கை நடத்தி வந்தபோது, அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால், வழக்கறிஞரை சந்தித்து ஆட்சேபனைகளை தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே, மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு எதிராக முதலேற்பு வழக்கில், 20.09.2018 அன்று, பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கேட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை அனுமதிக்க வேண்டுமென்றும் எடுத்துரைக்கப்பட்டது.

**7.** எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், 2019-2020 ஆண்டுகளில் கோவிட் 19 தொற்கு காரணமாக மனுதாரரும், அவரது குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், வழக்கறிஞரை சந்திக்கவில்லை. அசல் வழக்கில் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் கொடுத்தபோதும் விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யாததால், 20.09.2018 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு பின்னிட்டு 5 வருடங்கள் காலதாமதமாக பொய்யான காரணங்களுடன் மனுதாரர் தனியாகவும், அவரது தாயாரும், சகோதரரும் இ.ம.எண்.3/2023 என்ற எண்ணில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்திருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் சரியல்ல என்றும், எந்தவிதமான ஆவணங்களையும், மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரரின் தந்தை, இந்த எதிர்மனுதாரரிடன் கடன் பெற்றதற்காக பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்தது, மனுதாரருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் தெரியும் என்பதால், எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கை நடத்தாமல் வழக்கை காலதாமதப்படுத்த இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், M.துரைசாமி எதிர் வசந்தா மற்றும்

அகிலா என்ற வழக்கில் (2023)(1) CTC 444) 2 1/2 வருடங்கள் கழித்து தாக்கல் ஆணை 9 விதி 7 மனுவையே சென்னை உயர்நீதிமன்றம் ஏற்கக்கூடாது என தீர்ப்பளித்துள்ளது என்றும், ஆனால் இந்த மனு 5 வருடங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, 2019-2020 தேதியில் கோவிட் தொற்று காரணமாக அவரும் அவரது குடும்பத்தாரும் பாதிக்கப்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால், வழக்கறிஞரை சந்திக்கவில்லை என்றும், மேலும் தனது தாயார் மாடியிலிருந்து கீழே விழுந்து சிங்கரிபாளையத்தில் மாவு கட்டு கட்டி படுத்த படுக்கையாக இருந்தார் என்ற காரணத்தினால், தனது வழக்கறிஞரை சந்தித்து உரிய நேரத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என வாதிடப்பட்டது.

9. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் மாண்புமிகு சென்னை உயர்நீதின்றம் வழங்கிய 2023(1) CTC 447 Page No.447-என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பை முன்னிலைப்படுத்தி மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தை நிரூபிக்க தகுந்த ஆவணங்களை தாக்கல் செய்யாவிட்டால், அவர்களுக்கு எதிரான உத்தரவு ரத்து செய்யக்கூடாதென வாதிட்டார். மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் " The practice of leniently condoning the long delay by imposing cost is opposed to law. The legal principles at no circumstances be compromised by condoning the unexplained delay by imposing cost. Th issues are to be decided on merits and by applying the legal principles established. If the courts started taking a lenient view for condoning an uncondonable delay by imposing cost, then the legal principles are diluted and it would result in miscarriage of justice. Greater prejudice would be caused to the opposite party, who is forced to defend his case beyond a reasonable period of time and after the issues became lapsed. More so, the parties are tactically adopting such procedures for prolongation of the litigation and thus, the courts are not expected to compromise

the legal principles and condoning the long unexplained delay by imposing cost. The cost cannot compromise the legal principles. The irreparable loss and prejudice caused to the other parties cannot be compensated by some cost. Thus, the practice of imposing cost for allowing uncondonable long delay is to be deprecated" .

10. மேற்படி வழக்கின் காலதாமதத்திற்கான தகுந்த காரணங்களால் நிரூபிக்கப்பட்டாலொழிய, மேற்படி காலதாமதம் மன்னிக்கக்கூடாதென மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் குடும்பத்தினர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள சூழ்நிலையிலும், நீதியின் நலனை கருதியும், இவ்வழக்கில் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்புகளை வழங்கினால் மட்டுமே வழக்கில் இறுதி முடிவை எட்ட முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்து, எதிர்மனுதாரருக்கு இம்மனுவினால் ஏற்பட்ட இடர்பாடுகளை செலவுத்தொகை விதிப்பதால் சமன் செய்யலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், மனுதாரர் இன்றிலிருந்து 15 நாட்களுக்கள் ரூ.5,000/-ஐ எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக வழங்கும் சூழ்நிலையில் இம்மனு அனுமதிக்கப்பட்டும், தவறும் சூழ்நிலையில் மறு விசாரணையின்றி தள்ளுபடி செய்யப்பட்டும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 02.01.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2024.12.12 20:11:32 +0530

3 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

**இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2024.12.12 20:11:38 +0530

3 வது கூடுதல் மாவட்ட & அமர்வு நீதிபதி,

தாராபுரம்.

Order IN
IA.No.3/2023 IN
OS.No.295/2017
Date:12.12.2024